# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No. 245/2024

சாட்சி : PW–1
பெயர் : திரு. நந்தகுமார் தேதி : 14.07.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( பிரதிவாதிகள் தரப்பில்)

இவ்வழக்கு மற்றும் முதல்விசாரணை பிரமாண பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பிரதிவாதிகள் எங்கள் நிலத்தை அபகரித்து விட்டார்கள் அதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். எனது விலாசம் 3/6, சேனைக்காடு, உத்தமசோழபுரம் ஆகும். வழக்கு சொத்துகள் உத்தமசோழபுரம் கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்துகளின் சர்வே எண். 69/9, 69/10 ஆகும். வழக்கு சொத்துகள் ஆதியில் ஒரு வேடக்காள் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது. மேற்படி வேடக்காள் எனது தகப்பனாருக்கு பாட்டி ஆவார். மேற்படி வேடக்காள் 1968 ம் ஆண்டில் ஒரு புள்ளியம்மாள் வகையறாவிடமிருந்து கிரயம் பெற்றார். வேடக்காள் வைகுந்தம் ஆலாம்பாளையத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். மேற்படி வேடக்காள் 1985ம் ஆண்டு என் தகப்பனார் செல்லப்பன் பெயருக்கு ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். 1968ம் ஆண்டிலிருந்து 1985ம் ஆண்டு வரை வழக்கு சொத்துகள் எங்கள் சுவாதீனத்தில் இருந்தது என்பதற்கு ஆவணங்கள் ஒப்படைத்துள்ளேன். என்னென்ன ஆவணங்கள் ஒப்படைத்துள்ளேன் என்றால் கிரயப்பத்திரம் மற்றும உயில் ஒப்படைத்துள்ளேன். வேடக்காள் பெயரிலுள்ளதாக பட்டா, சிட்டா, வரிரசீதுகள் மற்றும் வருவாய் ஆவணங்கள் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எனது

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.07.14 17:11:36 +0530

I Additional District Judge,
Salem

தகப்பனார் பெயர் செல்லப்பன் ஆகும், உயில் என் தகப்பனாருக்கு எழுதி கொடுத்தது ஆகும். மேற்படி உயில் எழுதி கொடுக்கப்பட்ட காலத்திலிருந்து பின்னிட்ட காலத்திற்கு பட்டா, சிட்டா, வரிரசீதுகள் மற்றும் வருவாய் ஆவணங்கள் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் மூலம் கிடைக்கப்பெற்ற 2.07 ஏக்கர் சொத்தில் 1.07 ஏக்கர் சொத்தை ஒரு ஆனந்தபாபு என்பவருக்கு எனது தகப்பனார் விற்பனை செய்துள்ளார். மேற்படி ஆனந்தபாபு இவ்வழக்கில் ஒரு தரப்பினர் அல்ல. மீதம் ஒரு ஏக்கர் என் தகப்பனாரிடம் இருந்தது. நாங்கள் மேற்படி ஒரு ஏக்கர் சொத்தை அளவீடு செய்து பார்த்தோம். வழக்கு சொத்தை அளவீடு செய்து பார்த்தோம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் நாங்கள் தான் சுவாதீனத்தில் உள்ளோம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோன்று ஒரு ஏக்கர் சொத்து அங்கு இல்லை என்றும், 99 சென்ட் தான் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்திற்கு பட்டா, சிட்டா, வரி ரசீதுகள் மற்றும் வருவாய் ஆவணங்கள் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் 21 சென்ட் நிலத்தை அபகரித்து விட்டார்கள் என்று சொத்தை அளந்து பார்த்து தெரிந்துகொண்டோமா என்றால் 2023ம் ஆண்டில் வருவாய் ஆவணங்களை அவர்கள் மாற்றியுள்ளார்கள். அதன்படி நாங்கள் தெரிந்துகொண்டோம். 2ம் பிரதிவாதி பெயரில் 2002ம் ஆண்டில் கிரய ஆவணம் ஏற்பட்டிருக்கலாம் அந்த விவரம் எங்களுக்கு அப்போது தெரியாது. 2023 ம் ஆண்டில்தான் தெரியவந்தது. வழக்கு சொத்தில் 2023ம் ஆண்டு வரை நாங்கள் சுவாதீனத்தில் இருந்தோம். 2023ம் ஆண்டு வரை வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்தோம் என்பதற்கு பட்டா, சிட்டா, வரிரசீதுகள் மற்றும் வருவாய் ஆவணங்கள் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.எந்த தேதியில் எங்களை வழக்கு சொத்திலிருந்து வெளியேறறினார்கள் என்பதை தேதியுடன்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.07.14 17:11:53 +0530

I Additional District Judge,
Salem

சொல்லியுள்ளோம். எந்த தேதியிலிருந்து எங்களை வெளியேற்றிவிட்டார்கள் என்று வழக்கு பிராதிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்கு சொத்தில் நாங்கள் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் இருந்து 12 ஆண்டுகள் முன்பாகவே நாங்கள் வெளியேறிவிட்டோம் என்றும் எனவே எங்கள் வழக்கு காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.69/9–ல் பேர்பாதி மற்றும் 69/10A, 69/10B, 69/10C ஆகும். சர்வே எண்.69/9 ல் ஒரு செண்ட் குறைவு உள்ளது. ஆவணங்களின் அடிப்படையில் ஒரு செண்ட் குறைவதை கண்டுபிடித்தோம். மேற்படி சொத்தை நாங்கள் அளந்து பார்க்கவில்லை. சர்வே எண்.69/10A, 69/10B, 69/10C சொத்தில் மொத்தம் 20 செண்ட் குறைவு உள்ளது. ஆவணங்களின் அடிப்படையில் 20 செண்ட் குறைவதை கண்டுபிடித்தோம். மேற்படி சொத்தை நாங்கள் அளந்து பார்க்கவில்லை. மேற்படி நான்கு சர்வே எண்கள் கொண்ட சொத்துகளும் எங்கள் பெயரிலுள்ளது என்பதற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திலிருந்து எங்களை வெளியேற்றினார்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2023ம் ஆண்டில் 2ம் பிரதிவாதி எங்களை வெளியேற்றிவிட்டார். 2ம் பிரதிவாதியின் மீது காவல்துறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. ராஜ்குமார் ஆவணத்திற்கு முன்பு நான்கு ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி நான்கு ஆவணங்களும் எங்களுக்கு தெரியாமல் ஏற்பட்டுள்ளது என்பதற்கு மாவட்ட பதிவாளரிடம் புகார் கொடுத்தோம். அந்த புகாரின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் அவர்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மேற்படி ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்ட நபர்கள் மீது காவல்துறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.07.14 17:11:39 +0530

I Additional District Judge,
Salem

பிரதிவாதிகளின் தரப்பில் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

R.Velaras
Digitally signed by R.Velaras
Date: 2026.07.14 17:11:46 +0530

I Additional District Judge,
Salem